# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1470 - 2006 නොවැම්බර් 03 වැනි සිකුරාදා - 2006.11.03

*1470 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1058 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1058 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1059 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) சமோதா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2006, ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) ஒதுக்கீடு சட்டமூலம் 2006, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) இலங்கை மின்சார சபை (திருத்தம்) சட்டமூலம் 2006, ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, நவெம்பர் 10 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, ஒற்றோபர் 27 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

இலங்கைப் புகையிரதப் பகுதிக்கு பிற்றுமினஸ் முலாம் பூசப்பட்ட 200000 இலாஸ்டிக் தண்டவாள கிளிப்புக்களை வழங்குவதற்கான கேள்விகள்

1. தலைவர், திணைக்கள கேள்விச்சபை, இலங்கைப் புகையிரத சேவைகள், புகையிரத தலைமையகம், கொழும்பு 10, இலங்கையில் கொங்கிறீற் சிலிப்பர்களுடன் உபயோகிப்பதற்கான பிற்றுமினஸ் முலாம் பூசப்பட்ட 200000 இலாஸ்டிக் தண்டவாள கிளிப்புக்களை வழங்குவதற்கான கேள்விகள் உற்பத்தியாளர்கள்/விநியோகத்தர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒப்பந்தகாரர்கள் தமது விலைமனுக்களை நேரடியாகவோ அல்லது இலங்கையிற் பதிவு செய்யப்பட்டவர்களும், அதிகாரத் தத்துவம் பெற்றவர்களுமான அங்கீகரிக்கப்பட்ட முகவர்களினூடாக சமர்ப்பிக்கலாம்.

2. மீளப்பெறப்பட முடியாத கேள்விப்பணமாக ரூபா 2,500.00 ஐ அல்லது அதற்குச் சமமான இலகுவாக மாற்றீடு செய்யக்கூடிய தொகையைச் செலுத்துவதன் மூலம் புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் காரியாலயம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து 2006.12.05 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை (இலங்கை நேரம்) பெறப்படும் கேள்விப் பத்திரங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. உற்பத்தியாகும் இலாஸ்டிக் தண்டவாள கிளிப்புக்கள் ஐ. எஸ். ஓ. 9001 : 2000/ஐ. எஸ். ஓ. 9002 : 1994 /பீ. எஸ். ஈ. என். ஐ. எஸ். ஓ. 9001 : 2000 /பீ. எஸ். ஈ. என். ஐ. எஸ். ஓ. 9002 : 1994 கம்பனி சான்றிதழுக்கு அமைவானதாக அல்லது அதற்கு சமமான சர்வதேச தர முகாமைத்துவ முறைமை நியமனத்துக்கு உரித்தானதாக இருத்தல் வேண்டும்.

4. கேள்விகள் 07.12.2006 பிற்பகல் 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும் சீலிடப்பட்ட கேள்விகளை பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிப்பதன் மூலமாகவோ பின்வரும் முகவரியிற் சமர்ப்பிக்கலாம் :-

தலைவர்,
திணைக்கள கேள்விச் சபை,
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையகம்,
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை.

5. மேலே பந்தி (04) இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி ஒப்பந்தகாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும் போது சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

06. கேள்விப் பத்திர ஆவணங்களை எந்தவித கட்டணங்களுமின்றி புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் காரியாலயம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் பரிசீலிக்கலாம்.

07. மேலதிக விபரங்களுக்குத் தயவுசெய்து பின்வரும் முகவரியிற் தொடர்பு கொள்ளவும். புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர், புகையிரதக் களஞ்சியத் திணைக்களம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை. தொலைபேசி இலக்கங்கள் : 94(11)2432044 அல்லது 94(11)2436818

தலைவர்,
திணைக்கள கேள்விச் சபை.

தொடர்பு இலக்கம் : எஸ். ஆர். எஸ். /எவ். 6542.

11-49

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பொலனறுவை, செவனப்பிட்டிய, மெனிக்வெல இல. 228 இல் வசிக்கும் மத்துமகே கப்ரியல் சீலவதி ஆகிய என்னால், தெல்தெனிய, இல. 30, புதிய நகர் தெல்தெனியவை, சேர்ந்த பிரசித்த நொத்தாரிஸ் திருமதி குமாரி கரலியத்த என்பவரால் 2004 ஆம் வருடம் யூலை மாதம் 1 ஆந் திகதி அத்தாட்சி அனுமதிப்படுத்தி அட்டோர்ணி பத்திரத்தை இல. 5279 இல. 19 - 1 ஆம் ஒழுங்கை சுவசக்தி மகாவெலி வீடமைக்கும் வலயம், அளுத்வத்தை வீதி, திகன இரஜவெல்லையில் வசிக்கும் திரு. எஸ். எம். சண்முகம் அவர்கள் என்னுடைய அட்டோர்ணியாக நியமித்ததை இன்று தினம் அட்டோர்னிப் பத்திரத்தை இரத்துச் செய்து செல்லுபடி அடைந்ததாக இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இந்நாளில் அறியத்தருகிறேன்.

மத்துமகே கப்ரியல் சீலவதி

11-01

## நொத்தாரிசு இறுதிப்பரீட்சை தொடர்பான அறிவித்தல்

அம்பாறை மாவட்டம், தம்பிலுவில் 2 ஆம் குறிச்சி தம்பிலுவில் கிராம சபை வீதி, சபாரெத்தினம் நமசிவாயம் ஆகிய நான் இவ்வருடம் (2006) இறுதிப் பகுதியில் நடைபெறவிருக்கும் நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் முடிவில் அம்பாறை மாவட்டம், அம்பாறை மாவட்ட மேல் நீதிமன்ற வலயத்தில் பிரசித்த நொத்தாரிசாக கடமையாற்றவுள்ளேனென்பதையும் நொத்தாரிசு கட்டளைச் சட்டம் 107 இன் அத்தியாயம் 7 ஆம் பிரிவுக்கமைய இத்தால் அறியத்தருகின்றேன்.

சபாரெத்தினம் நமசிவாயம்,

கிராமசபை வீதி,
தம்பிலுவில் 2,
தம்பிலுவில்.

2006.10.15

11-149

# ஏல விற்பனைகள்

## தேசிய சேமிப்பு வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் கீழான விற்பனை*

**தேசிய சேமிப்பு வங்கிக்கு சொந்தமான ஆதனத்தின் ஏல விற்பனை**

**வடமேல் மாகாணம், குருநாகலை மாவட்டம், உடபொல மெதலெச கோறளை தம்பதெனி ஹத்பத்துவின் பரபவில்லா கிராமத்தில் அமைந்துள்ள பரபவில்லா எஸ்டேட் என அழைக்கப்படுவதும் 1995.08.21 ஆந் திகதியிட்ட 130பீ/ 95 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட 15 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் துண்டு 280 என அடையாளமிடப்பட்டதுமான வரையறுக்கப்பட்ட பெறுமதியுள்ள காணி**

*(இல. 280 துருவியான பொத்துஹேரயைச் சேர்ந்த திரு. பி. கே. வை. நந்தசிறியினால் இவ்வாதனம் தேசிய சேமிப்பு வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டது.)*

**ஆதனங்களின் விவரணம்.**-வடமேல் மாகாணம், குருநாகலை மாவட்டம் உடபொல மெதலெச கோறளை தம்பதெனி ஹத்பத்துவின் பரபவில்லா கிராமத்தில் அமைந்துள்ள பரபவில்லா எஸ்டேட் என அழைக்கப்படும் காணியின் உள்ளேயும் வெளியேயும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. சீ. எஸ். எம். அபயசேகரவினால் ஆக்கப்பட்ட 1995.08.21 ஆந் திகதியிட்ட 130பீ/ 95 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 280 என அடையாளமிடப்பட்டதும் பதினைந்து பேர்ச்சஸ் (0ஏ.0றூ.15பே.) விஸ்தீரணம் கொண்டதும் - வடக்கில் : துண்டு 278 (பாதையையும்) ; கிழக்கில் : துண்டு 279 ஐயும் ; தெற்கில் : துண்டு 283 ஐயும் ; மேற்கில் : துண்டு 281 ஐயும் எல்லைகளாகக் கொண்டதும் அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாகவும் குருநாகல் காணிப்பதிவகத்தில் எப் 1078/211 இல் பதிவு செய்யப்பட்டதுமான துண்டு 280 எனும் பிரித்து வரையறுத்த காணித்துண்டு முழுவதும்.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. சீ. எஸ். எம். அபயசேகரவினால் ஆக்கப்பட்ட 1995.08.21 ஆந் திகதியிட்ட 130பீ/ 95 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட சகல பாதை ஒதுக்குகளின் மேலாகவும் ஊடாகவும் செல்வதற்கான பாதையுரித்தும் உள்ளடங்களாகவும்.

இவ்வாதனம், பகிரங்க ஏலமூலம் 2006.11.21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாக அதே இடத்தில் விற்கப்படும்.

**ஆதனத்திற்கு செல்லும் வழி.**-குருநாகலை நகரிலிருந்து கொழும்பு வீதி வழியாக 07, 1/2 மைல்கள் சென்று இடது பக்கம் திரும்பி 15 அடி அகலமான பாதையில் 200 யார் செல்லவும்.

**கொடுப்பனவு செய்யப்படும் விதம் :** ஏலத்தைப் பெற்ற கொள்வனவுகாரர் விற்பனை முடிந்தவுடன் பின்வரும் தொகைகளை ஒவ்வொரு ஆதனத்தின் பேரிலும் காசாகக் கொடுக்க வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 25% ;
(2) பிரதேச சபைக்கு வரியாகக் கொள்வனவு விலையின் 1% ;
(3) ஏலதாரர் தரகராக கொள்வனவு விலையின் 2 1/ 2% (இரண்டரை வீதம் மட்டும்) ;
(4) ரூபா 45,000 இற்கு மேற்படாது மொத்த விளம்பரச் செலவின் 50% ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுபவரின் கட்டணமாக ரூபா 500 .
(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்துவதற்காக நொத்தாரிசுக் கட்டணமாக ரூபா 3,000.

கொள்வனவு விலையின் மீதி 75% விற்பனைத் திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள்ளாக வங்கிக்கு செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களையும் விற்பனை நிபந்தனைகளையும் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டியவர்.

உதவிப் பொது முகாமையாளர் (கடன்), தேசிய சேமிப்பு வங்கி, இல. 255, காலி வீதி, கொழும்பு 03, தொலைபேசி : 011-2574120

சொக்மன் மற்றும் சமரவிக்கிரம
பட்டய ஏலதாரர்களும்,
இலங்கையின் அரச தனியார்துறை
வங்கிகளதும் மதிப்பீட்டாளர்களும்,
நீதிமன்ற தரகர்களும்.

| *நகர அலுவலகம்:* | *தலைமை அலுவலகம்:* |
|---|---|
| 55ஏ தர்மபால மாவத்தை | 24, டொறிங்டன் வீதி, |
| கொழும்பு 3 | கண்டி. |
| தொலைபேசி : 011-2448526, 011-2441761 | தொலைபேசி : 081-2224371, 081-2227593 |
| தொலைநகல் : 011-2448526 | தொலைநகல் : 081-2224371 |
| மின் அஞ்சல் : samera@ srilanka,net. | மின் அஞ்சல் : samera@ diamond.lanka.net. |

11-107

---

## கமர்ஷ் பாங்க் ஒப் சிலோன் (நகரக் கிளை மூலம்)

காணி ஆதனம் ஏல விற்பனை

*(கடன் எடுத்த அநுர பிரயிட் டர்ஸ் என்ற பெயரில் தனி உரிமையாளராக வியாபாரம் செய்யும் பண்டித கே தொன் அஜித் ரோஹான் பெரேரா மேற்படி காணியை கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்டது.)*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கமர்ஷ் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் மூலம் எனக்களிக்கப்பட்ட அதே

இடத்தில் 2006, நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்கு.**- 03.02.2005 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், "லங்காதீப", "த ஐலன்ட்", மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் விற்பனை பற்றிய விளம்பரத்துக்கு அரசாங்க வர்த்தமானி 03.11.2006 ஆந் திகதியும் 06.11.2006 ஆந் திகதியுடைய லங்காதீப, ஐலண்ட் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனங்களின் விவரணம்.**-மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லேபத்து சல்பிட்டி கோரளையில் மகரகம டி. டி. சி. எல்லைக்குள் மகரகம கிராமத்தில் அமைந்துள்ள இலக்கம் 59, விவேகராம மாவத்தை இலக்கம் கொண்ட தெல்காவத்த என்ற காணியின் நிலஅளவையாளர் எஸ். டபிள்யு. மாகலண்தவின் 07.09.1984 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1865 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1B1E காணித்துண்டு (இக்காணியின் விஸ்தீரணம்: (0ஏ. 0றூ. 10பே.) இக் காணியின் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.**- மகரகம சந்தியில் இருந்து பமனுவ வீதியில் ஒரு 100 மீட்டர் தூரம் சென்று ஆதனத்திற்குச் செல்ல முடியும். இடது பக்கம் புகையிரத ஸ்டேசன் வீதியூடாக மீட்டர் 350 சென்று பிறகு இலக்கம் 57ஏ ஸ்டேசன் வீதி என்ற காணியை காண முடியும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**-ஏலவிற்பனை முடிவில் கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்கள் பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10%

(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய 1% ;

(3) கொள்வனவு விலையின் தரகு தாரரின் பணமான 2 1/2%;

(4) விற்பனை நிபந்தனைக்கு நொத்தாரிசு கட்டணம் ரூபா 2000 ;

(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ;

(6) விற்பனைக்கான செலவு செய்யப்பட்ட மொத்த விளம்பர செலவுகள் ;

(7) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 90% விற்பனை செய்யப்பட்ட நாள் முதல் 30 நாட்களுக்குள் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பிரதான கிளையில் பணமாக செலுத்த வேண்டும்.

மேலதிக விபரங்களுக்காகவும் உரித்து உறுதிகளையும் பின்வரும் இடத்தில் பெற்றுக் கொள்ள முடியும். "முகாமையாளர், கமர்ஷயல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட், 21, பிரிண்டர் வீதி, கொழும்பு 1, தொலைபேசி இல. : 2447167, 2347719, பெக்ஸ் இல. : 2347717.

எல். பி. சேனநாயக்க, ஜே. பி.,
பிரதான உத்தரவுபெற்ற ஏலதாரர்.
விலைமதிப்பிடுநர், நீதிமன்ற
ஆணையாளர் கொழும்பு மாவட்ட
மேல் நீதிமன்றம் அரசாங்க மற்றும்
வர்த்தக வங்கிகளின் ஆணையாளர்.

44, புதுக்கடை வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி/பெக்ஸ் : 2445893.

11-140

**மக்கள் வங்கி - பிங்கிரிய கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் ஏல விற்பனை*

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பிங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவு, கரந்தாபத்து கோறளை, இலக்கம் 404, தாரன கிராம உத்தியோகத்தர் பிரிவு, திவுல்கஸ்அங்க என்ற கிராமத்தில் அமைந்துள்ள "கோன்கஹமுல ஹேன" என்ற காணிக்கு நிலஅளவையாளர் நாயகம் அவர்களால் அளந்து அவர் பொறுப்பிலிருக்கும் 1 ஆம் இலக்க க. கி. ப. 2124 (மேலதிக 1 ஆம் இலக்க) வரைபடத்தின் 75 ஆம் இலக்க காணி பரப்பளவு 0.412 ஹெட்டேயர் விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம் செடி, பழவகை உட்பட அனைத்தும் அடங்கலாக ஏலவிற்பனை**

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் 2006.11.21 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு குறிப்பிட்ட சொத்து அமைந்துள்ள இடத்தில் என்னால் பிரசித்த ஏலவிற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு** .- 2000.04.07 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2000.11.24 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.**- போவத்தை சந்தியிலிருந்து 5 மைல் சென்றவுடன் குளியாபிட்டிய பாதையில் மெலதெனிய சந்தியால் இடது பக்கம் திரும்பி 1/4 மைல் அளவு சென்றவுடன் உடவெல பாதை அகப்படும். அவ்விடத்தால் வலது பக்கமாக 1/2 மைல் அளவு சென்றவுடன் திவுல்கஸ்அங்க பாதை அகப்படும். அவ்விடத்தால் அகப்படும் குளத்தைத் தாண்டி 100 யார் அளவு சென்றவுடன் கிரவல் பாதையில் இடது பக்கமாக இந்தக்காணி அகப்படும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏலவிற்பனையின் முடிவின் போது சொத்தை விலைக்கு வாங்கிய நபர் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு கொடுப்பனவை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் :-

(1) தாம் வாங்கிய விலையின் 10% த்தையும் ;

(2) உள்ளூராட்சி அதிகார சபையினதும் பிரதேச சபையினதும் 1% வரியையும் ;

(3) ஏலவிற்பனையாளரின் பங்காக ஏலவிற்பனை தொகையின் 2 1/2% கமிசனையும் ;

(4) எழுதுவினைஞர்களினதும் அறிவிப்பாளர்களினதும் கட்டணமாக ரூபா 500 ஐயும் ;

(5) விற்பனைச் செலவு மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணத்தையும் ;

(5) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணத்தையும்.

விற்பனை விலையின் மிகுதி 90 வீத பங்குப் பணத்தை ஏலவிற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் குருநாகல் மக்கள் வங்கி பிரதேச பிரதான முகாமையாளரிடம் செலுத்தப்படல் வேண்டும். தொலைபேசி இல. : 037- 2222453, பெக்ஸ் இல. 037- 2222338.

உரிமைப்பத்திரம், மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற் குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத்தவறின் ஏற்கனவே செலுத்திய பணத்தின் 10% ஐயும் திருப்பிச் செலுத்தாமலிருக்கவும், மீண்டும் சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற
ஏலதாரர், மதிப்பீட்டாளர்.

இல. 28, புதிய சட்டத்தரணிகள் கட்டிடத் தொகுதி,
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.
தொலைபேசி இல. : 037- 2220062

11-142

---

**மக்கள் வங்கி - பிங்கிரிய கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் ஏல விற்பனை

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பல, ஹத்பத்துவ, யாகம்பத்து கோறளை, கஹவல என்ற கிராமத்தில் அமைந்துள்ள "கஹவல வத்தை" என்ற காணிக்கு 1997.02.28 ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்டுள்ள 1922 ஆம் இலக்க வரைபடத்தின் 75 ஆம் இலக்க காணி பரப்பளவு 0ஏ. 0றூ. 30பே. விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள அனைத்தும் அடங்கலாக ஏல விற்பனை**

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் 2006.11.21 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு குறிப்பிட்ட சொத்து அமைந்துள்ள இடத்தில் என்னால் பிரசித்த ஏலவிற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு** .- 2006.08.18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006.08.04 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி**.- பிங்கிரிய நகரத்திலிருந்து தும்பலசூரிய பாதையில் 2 மைல் அளவு சென்று கந்துருவெவ பாடசாலைக்கு அருகால் வலது பக்கம் இருக்கும் வெல்லராவ பாதையில் 1/4 மைல் அளவு சென்றவுடன் அகப்பம் மயானத்துக்கு அருகால் வலது பக்கம் திரும்பி 60 யார் அளவு சென்றவுடன் இந்தக் காணி அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.- ஏலவிற்பனையின் முடிவின் போது சொத்தை விலைக்கு வாங்கிய நபர் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு கொடுப்பனவை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் :-

(1) தாம் வாங்கிய விலையின் 10% த்தையும் ;

(2) உள்ளூராட்சி அதிகார சபையினதும் பிரதேச சபையினதும் 1% வரியையும் ;

(3) ஏலவிற்பனையாளரின் பங்காக ஏலவிற்பனை தொகையின் 2 1/2% கமிசனையும் ;

(4) எழுதுவினைஞர்களினதும் அறிவிப்பாளர்களினதும் கட்டணமாக ரூபா 500 ஐயும் ;

(5) விற்பனைச் செலவு மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணத்தையும் ;

(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணத்தையும்.

விலைக்கு வாங்கிய பணத்தின் மிகுதி 90 வீத பங்குப் பணத்தை ஏலவிற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் குருநாகல் மக்கள் வங்கி பிரதேச பிரதான முகாமையாளரிடம் செலுத்தப்படல் வேண்டும். தொலைபேசி இல. : 037- 2222453, பெக்ஸ் இல. 037- 2222338.

உரிமைப்பத்திரம், மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற் குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத்தவறின் ஏற்கனவே செலுத்திய பணத்தின் 10% ஐயும் திருப்பிச் செலுத்தாமலிருக்கவும், மீண்டும் சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற
ஏலதாரர், மதிப்பீட்டாளர்.

இல. 28, "புதிய சட்டத்தரணிகள் கட்டிடத் தொகுதி",
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.
தொலைபேசி இல. : 037- 2220062

11-146

---

**இலங்கை வங்கி**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்து நிலமனை ஏல விற்பனை**

இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2003.01.31 ஆந் திகதி 1274 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 2003.01.27 ஆந் திகதி "தினமின", "தினகரன்", "டெய்லி நியூஸ்" பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த

சொத்தையும் நிலமனையையும் இல. 24, தலைமை அலுவலகம், ரொறிங்டன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரம 2006.11.22 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

சபரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், நவதுன் கோரளை, மெதபற்றுவில் நிவித்திகலயில் அமைந்த "பீங்கந்த எஸ்டேட் பிளான்டேஷன்" என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். சமரசேகர தயாரித்த 1982, யூன் 29 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 48 இல் (எல். ஆர். சி. இல. பி.ச. வ./12) விபரித்த துண்டு 46 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : 45உம் ; கிழக்கில் : அதே காணியின் பகுதியும் ; தெற்கில் : துண்டு 47 உம் ; மேற்கில் : எஸ்டேட் றோட்டும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். இது இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் பீ475/233 இல் பதிவு செய்யப்பட்டது.

அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 48இல் விபரித்த எஸ்டேட் றோட்டை உபயோகிப்பதற்கான உரிமையும் ஆகும்.

கே. சமரசிங்ஹ,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
நிவித்திகல.

11-150

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்ரீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டுக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை-2006**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 03.11.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.10.2006 |
| | | வெள்ளி | 10.11.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.10.2006 |
| | | வெள்ளி | 17.11.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.11.2006 |
| | | வெள்ளி | 24.11.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.11.2006 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 01.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.08.2006 |
| | | வெள்ளி | 08.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.08.2006 |
| | | வெள்ளி | 15.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.09.2006 |
| | | வெள்ளி | 22.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.09.2006 |
| | | வெள்ளி | 29.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.09.2006 |

**அட்டவணை-2007**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 05.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.12.2006 |
| | | வெள்ளி | 12.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.12.2006 |
| | | வெள்ளி | 19.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.01.2007 |
| | | வெள்ளி | 26.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.01.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006, சனவரி 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.